1992 ஏப்ரல் 1]

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரிகை துறையைச் சார்ந்தவர்களுக்கு வீட்டுவசதி வாரியத்தால் ஒதுக்கப்படுகின்ற விழுக்காடுகள் முறையாக ஒதுக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக, ஏதேனும் புகார் இருந்தால், அப்படி ஒதுக்கப்படவில்லை என்று சொன்னால், அது துறையினுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 431, திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள், இருக்கையில் இல்லை.

வினா எண். 432, திரு. ம. தனபால், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்.

432—

இல்லளூர் ஆதிதிராவிட மாணவர்களுக்கு ஓராசிரியர் பள்ளி.

*4836—திரு. ம. தனபால் :

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) திருப்போரூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட இல்லளூர் ஆதிதிராவிடர் காலனியில் வசிக்கும் பள்ளி மாணவர்களுக்கு ஓராசிரியர் பள்ளி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஓராசிரியர் பள்ளி அமைப்பு தற்போது அமலில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ம. தனபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்குட்பட்ட இந்த இல்லளூர் பகுதி ஆதி திராவிட மக்கள் அதிகமாக வசிக்கும் பகுதி. அந்தப் பகுதியிலே கிட்டத்தட்ட ஆயிரம் மக்கள் தொகைக்கு மேல்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இருக்கிறார்கள். அங்கேயிருந்து இன்னொரு பள்ளிக்குச்சென்று படிக்கவேண்டுமென்று சொன்னால் 3 கிலோ மீட்டர் அந்தக் குழந்தைகள் நடந்து சென்று படிக்கவேண்டும். இங்கே நிதி நிலை அறிக்கையிலகூட, எங்களையெல்லாம் வாழ வைத்துக் கொண்டு இருக்கிற நமது தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்து இருக்கின்ற ஒரு அறிவிப்பு, ஒரு கிலோ மீட்டருக்குள்ளாக எந்தவொரு தொடக்கப் பள்ளியும் இல்லை என்று சொன்னால், 500 மக்கள் தொகைக்கு மேல் அங்கே இருப்பார்களேயானால் அந்தப் பகுதிக்கு ஓராசிரியர் பள்ளி அமைத்துத் தரப்படும் என்று அந்த அறிவிப்பில் சொல்லப்பட்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் இந்த நேரத்திலே ஒன்றைச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சொல்வதெல்லாம் வேண்டாம். கேள்வியாகக் கேட்காமல், திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருப்பதில் அர்த்தம் இல்லை. உட்காருங்கள்.

வினா எண் 433, திரு. எம். பூராசாமி, இருக்கையில் இல்லை.

வினா எண் 434, டாக்டர் பெ. வீரபாண்டியன், மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர்.

434—

கடுக்காய்த்தூள் தொழிற்சாலை

*4169 — டாக்டர் பெ. வீரபாண்டியன்:

மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) செங்கம் தொகுதியிலுள்ள ஜவ்வாது மலையில் கடுக்காய் விளைச்சல் அதிக அளவில் உள்ளனவா?

(ஆ) ஆம் எனில், அங்கு கடுக்காய்த்தூள் தயாரிக்கும் தொழிற்சாலை ஏற்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர்மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) வேலூர், திருப்பத்தூர், தர்மபுரி மற்றும் ஒசூர் கோட்டங்கள் உள்ளிட்ட வேலூர் வட்டத்தில் 1989-90 ஆம் ஆண்டில் கிடைத்த கடுக்காயின் அளவு 250 டன்கள் ஆகும்.

(ஆ) இல்லை :